### குற்றவியல் சட்டங்களை மறுசீரமைக்கும்

# 3 புதிய மசோதாக்கள் அறிமுகம்

## மக்களவையில் உள்துறை அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்தார்

**புதுடெல்லி**

ஐபிசி, சிஆர்பிசி, ஐஇசி ஆகிய குற்றவியல் சட்டங்களை மறுசீரமைக்கும் 3 புதிய மசோதாக்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மக்களவையில் நேற்று தாக்கல் செய்தார்.

இந்திய குற்றவியல் சட்டத்துக்கு (ஐபிசி) பதிலாக பாரதிய நியாய சம்ஹிதா 2023, இந்திய குற்றவியல் நடைமுறை சட்டத்துக்கு (சிஆர்பிசி) பதிலாக பாரதிய நாகரிக் சுரக்ஷா 2023, இந்திய சாட்சிகள் சட்டத்துக்கு (ஐஇசி) பதிலாக பாரதிய சாக்ஷிய விதேயக் 2023 ஆகிய 3 புதிய மசோதாக்கள் வரையறுக்கப்பட்டு உள்ளன. மக்களவையில் இந்த மசோதாக்களை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று தாக்கல் செய்தார். அப்போது அவர் பேசியதாவது:

கடந்த 1860-ம் ஆண்டில் இந்திய குற்றவியல் சட்டம், 1898-ம் ஆண்டில் இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம், 1872-ம் ஆண்டில் இந்திய சாட்சிகள் சட்டம் வரையறுக்கப்பட்டன. இவை ஆங்கிலேயர் கால சட்டங்கள். இவை ஆங்கிலேயர்களின் நிர்வாகத்தை வலுப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்டன. இவற்றால் நீதி நிலைநாட்டப்படவில்லை. தண்டனைகள் மட்டுமே நிறைவேற்றப்பட்டன.

எனவே இந்த 3 சட்டங்களுக்கு பதிலாக, இந்தியர்களின் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் 3 புதிய மசோதாக்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. தண்டனை வழங்குவதை குறிக்கோளாக கொண்டு இவை வரையறுக்கப்படவில்லை. நீதியை நிலைநாட்டும் வகையிலேயே இந்த புதிய மசோதாக்களின் விதிகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

நாடு முழுவதும் 18 மாநிலங்கள், 6 யூனியன் பிரதேசங்கள், உச்ச நீதிமன்றம், 22 உயர் நீதிமன்றங்கள், 5 சட்ட அமைப்புகள், 5 பல்கலைக்கழகங்கள், 142 எம்.பி.க்கள், 270 எம்எல்ஏக்கள், பொதுமக்கள் ஆகியோரின் பரிந்துரைகள், ஆலோசனைகளின் அடிப்படையில் இந்த புதிய மசோதாக்கள் தயார் செய்யப்பட்டுள்ளன.

### கும்பல் கொலைக்கு மரண தண்டனை

இதன்மூலம், தற்போது நடைமுறையில் இருக்கும் தேசத் துரோக சட்டம் திரும்ப பெறப்படும். தேசத் துரோக சட்டத்தின் மூலம் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்க முடியும். அதை மாற்றி 3 முதல் 7 ஆண்டுகள் வரை சிறை தண்டனை விதிக்கும் வகையில் புதிய மசோதாக்களில் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

கும்பலாக சேர்ந்து கொலை செய்யும் குற்றத்துக்கு குறைந்தபட்சம் 7 ஆண்டு சிறை தண்டனையும், அதிகபட்சமாக மரண தண்டனையும் விதிக்கப்படும். சிறாரை பாலியல் வன்கொடுமை செய்யும் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிக்கப்படும். வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட சிறாரின் அடையாளத்தை வெளிப்படுத்துவோருக்கு மிக கடுமையான தண்டனை விதிக்கப்படும்.

### 90 நாளில் குற்றப்பத்திரிகை

புதிய மசோதாக்களின்படி, ஒரு வழக்கில் போலீஸார் 90 நாட்களில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும். நீதிமன்றம் விரும்பினால் கூடுதலாக 90 நாட்கள் அவகாசம் வழங்கலாம். இதன்படி, 180 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வது கட்டாயமாகும்.

தற்போதைய சட்ட விதிகளின்படி, போலீஸ் அதிகாரிகள், அரசு அதிகாரிகள் மீது விசாரணை நடத்த அரசின் அனுமதியை பெற வேண்டும். புதிய மசோதாக்களின்படி 120 நாட்களுக்குள் அரசு முடிவெடுக்க வேண்டும். இல்லாவிட்டால், அனுமதி வழங்கியதாகவே கருதப்படும்.

பல்வேறு மாநிலங்களில் செயல்படும் ரவுடி கும்பல்களுக்கு மிக கடுமையான தண்டனைகள் விதிக்கப்படும். செல்போன் பறிப்பு உள்ளிட்ட சிறிய குற்றங்களும் கிரிமினல் வழக்காக கருதப்படும்.

அப்பாவிகள் மீது போலீஸார் பொய் வழக்கு பதிவு செய்வதாக புகார்கள் எழுகின்றன. இதை தடுக்க, குற்றம் சாட்டப்பட்டவரின் வீடுகளில் இருந்து பறிமுதல் செய்யப்படும் பொருட்களை வீடியோ பதிவு செய்ய வேண்டும்.

இந்த 3 புதிய மசோதாக்களையும் நாடாளுமன்ற நிலைக்குழு ஆய்வுக்கு அனுப்புமாறு சபாநாயகரை கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அமித் ஷா பேசினார்.

### 2020-ல் கமிட்டி நியமனம்

புதிய மசோதாக்கள் குறித்து மத்திய அரசு வட்டாரங்கள் கூறியதாவது:

ஐபிசி, சிஆர்பிசி, ஐஇசி சட்டங்களை மறுசீரமைக்க கடந்த 2020 மார்ச்சில் சட்ட நிபுணர்கள் அடங்கிய சிறப்பு கமிட்டி அமைக்கப்பட்டது. டெல்லியில் உள்ள தேசிய சட்ட பல்கலைக்கழகத்தின் அப்போதைய துணைவேந்தர் ரன்வீர் சிங் இதன் தலைவராகவும், சட்ட பேராசிரியர்கள் பாஜ்பாய், பல்ராஜ் சவுகான், மூத்த வழக்கறிஞர் மகேஷ் ஜேத்மலானி உள்ளிட்டோர் உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டனர்.

கமிட்டி நடத்திய பல்வேறு கட்ட ஆலோசனைக்கு பிறகு ஐபிசி சட்டத்தில் 22 பிரிவுகள் நீக்கப்பட்டுள்ளன. 175 பிரிவுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 9 புதிய பிரிவுகள் சேர்க்கப்பட்டுள்ளன. சிஆர்பிசி சட்டத்தில் 107 பிரிவுகளில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. 9 பிரிவுகள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன. ஐஇசி சட்டத்தில் 23 பிரிவுகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. ஒரு பிரிவு புதிதாக சேர்க்கப்பட்டுள்ளது. புதிய மசோதாக்களின்படி, ஒரு வழக்கில் புகார் முதல் தீர்ப்பு வரை அனைத்தும் டிஜிட்டலில் பதிவு செய்யப்பட வேண்டும். 7 ஆண்டு சிறை தண்டனை விதிக்கக் கூடிய வழக்குகளில், சம்பவ இடத்தில் தடயவியல் ஆய்வு கட்டாயம். வழக்கில் விசாரணை முடிந்த பிறகு, 30 நாளில் தீர்ப்பு வழங்க வேண்டும். வெளியான 7 நாளில் ஆன்லைனில் பதிவேற்ற வேண்டும்.

# ரஷ்யாவின் லூனா-25 விண்கலம், சந்திரயானுக்கு போட்டியில்லை

## இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கருத்து

**சென்னை**

ரஷ்யாவின் லூனா-25 விண்கலத்தை, சந்திரயானுக்கு போட்டியாக கருத வேண்டாம் என்று இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை தெரிவித்தார்.

நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கி ஆராய்ச்சி செய்வதற்காக சந்திரயான்-3 விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் செலுத்தியது. ஆகஸ்ட் 23-ம் தேதி தென்துருவப் பகுதியில் விண்கலத்தை மெதுவாக தரையிறக்க இஸ்ரோ முடிவு செய்து உள்ளது.

இந்நிலையில் நிலவின் தென்துருவத்தை ஆராய்வதற்காக ரஷ்யாவும் லூனா-25 எனும் விண்கலத்தை நேற்று அதிகாலை 2 மணியளவில் விண்ணில் ஏவியது. இது நிலவின் மேற்பரப்பில் உள்ள பனிக்கட்டிகள், கனிமங்கள், எரிபொருள் உட்படபல்வேறு அம்சங்கள் குறித்து ஆய்வு செய்யவுள்ளது. சுமார் 5 நாட்கள் பயணத்துக்கு பின்னர் நிலவின் சுற்றுப்பாதையை விண்கலம் சென்றடையும். தொடர்ந்து 5 முதல் 7 நாட்கள் சுற்றுப்பாதையில் சுற்றி வந்து நிலவில் லூனா-25 தரையிறங்க உள்ளது.

அதன்படி சாதகமான சூழல்கள் அமைந்தால் சந்திரயான்-3 விண்கலத்துக்கு முன்பே லூனா-25 நிலவில் தரையிறங்க வாய்ப்புள்ளது. இல்லையெனில் 2 விண்கலங்களும் ஒரேநாளில் நிலவில் தரையிறங்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையொட்டி சமூக வலைதளங்களில் இந்தியா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு இடையே போட்டி நிலவுவதாக தகவல்கள் பரவின. இதுகுறித்து இஸ்ரோ முன்னாள் விஞ்ஞானி மயில்சாமி அண்ணாதுரை கூறியதாவது;

இஸ்ரோவின் சந்திரயான்-3 மற்றும் ரஷ்யாவின் லூனா-25 விண்கலங்கள் ஒரேநாளில் ஒன்றுக்கு ஒன்று இடையூறு இன்றி நிலவில் தரையிறக்கப்பட உள்ளன. இதற்கிடையே 2011-ம் ஆண்டு சீனாவுடன் இணைந்து ரஷ்யா மேற்கொண்ட செவ்வாய் கிரக பயணத் திட்டம் தோல்வியடைந்தது. அதன் பிறகு முழுவதும் புதிய தொழில்நுட்பத்தில் லூனா-25 திட்டப் பணியை ரஷ்யா வடிவமைத்துள்ளது. அதன் செயல்பாடுகள் இறுதி வரை வெற்றிகரமாக அமைய வேண்டும்.

மறுபுறம் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் சந்திரயான்-3 திட்டம் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, திட்டமிட்டபடி சந்திரயான்-3 விண்கலம் நிலவில் மெதுவாக தரையிறக்கப்படும். அதனால் சந்திரயான்- 3, லூனா-25 ஆகியவற்றை போட்டியாக கருத வேண்டாம். இரு திட்டப்பணிகளும் வெற்றி பெற வேண்டும். எதிர்காலத்தில் விண்வெளி ஆய்வுகளில் இருவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இதுதவிர இஸ்ரோ ட்விட்டரில் வெளியிட்ட வாழ்த்துச் செய்தியில், “லூனா-25 விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டதற்காக ரோஸ்காஸ்மாஸ் (ரஷ்யா) மையத்துக்கு வாழ்த்துகள். நிலவை நோக்கிய பயணம் இனிமையாக அமையட்டும். இரு விண்கல திட்டங்களும் வெற்றி பெறட்டும்” என்று கூறப்பட்டுள்ளது.

---

### 47 ஆண்டுக்கு பிறகு நிலவுக்கு

# லூனா-25 விண்கலத்தை அனுப்பிய ரஷ்யா

## சந்திரயானுக்கு முன்னதாக தரையிறங்கும் என தகவல்

**மாஸ்கோ**

ரஷ்யாவின் விண்வெளி முகமை, லூனா-25 என்ற விண்கலத்தை நிலவுக்கு வெற்றிகரமாக அனுப்பி உள்ளது. இது இந்தியாவின் சந்திரயானுக்கு முன்னதாக தென்துருவத்தில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் (இஸ்ரோ) சார்பில் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து எல்விஎம்-3 ராக்கெட் மூலம் சந்திரயான்-3 விண்கலம் கடந்த ஜூலை 14-ம் தேதி விண்ணில் ஏவப்பட்டது. இது வரும் 23-ம் தேதி நிலவின் தென்துருவத்தில் தரையிறக்கப்பட உள்ளது.



விண்ணில் சீறிப் பாய்ந்த ரஷ்யாவின் லூனா-25.

இந்நிலையில், ரஷ்யாவின் விண்வெளி முகமையான ராஸ்காஸ்மோஸ், வோஸ்டோக்னி காஸ்மோட்ரோம் ஏவுதளத்திலிருந்து லூனா-25 என்ற விண்கலத்தை சோயுஸ் 2.1பி ராக்கெட் மூலம் நேற்று விண்ணில் வெற்றிகரமாக செலுத்தியது. கடந்த 1976-ம் ஆண்டு ரஷ்யாவை உள்ளடக்கிய சோவியத் யூனியன் சார்பில் நிலவுக்கு விண்கலம் அனுப்பப்பட்டது. அதன் பிறகு 47 ஆண்டுகளுக்குப் பிறகு ரஷ்யா சார்பில் முதல் முறையாக நிலவுக்கு விண்கலம் அனுப்பப்பட்டுள்ளது.

லூனா-25 விண்கலம் வரும் 16-ம் தேதி நிலவின் சுற்றுவட்டப் பாதையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதன் பிறகு நிலவின் சுற்று வட்டப்பாதையை சுற்றி வரும் லூனா-25, வரும் 23-ம் தேதி நிலவின் தென்துருவத்தில் தரையிறங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இந்தியாவின் சந்திரயான் விண்கலத்துக்கு முன்னதாகவே தரையிறங்கும் என கூறப்படுகிறது.

இதுகுறித்து ராஸ்காஸ்மோஸ் வெளியிட்ட அறிக்கையில், “நிலவில் விண்கலத்தை தரையிறக்கும் திறன் ரஷ்யாவுக்கு உள்ளது என்பதை பறைசாற்றவும் நிலவின் தரைப்பரப்பில் ரஷ்யாவாலும் கால்பதிக்க முடியும் என்பதை உறுதி செய்யவுமே லூனா-25 அனுப்பப்பட்டுள்ளது” என தெரிவித்துள்ளது.

இதுகுறித்து ரஷ்யாவின் விண்வெளி விஞ்ஞானி விட்டலி இகோரோவ் கூறும்போது, “நிலவில் தண்ணீர் உள்ளதா என ஆய்வு செய்ய வேண்டும் என்பது விஞ்ஞானிகளின் நோக்கமாக இருக்கலாம். ஆனால் அதிபர் புதினைப் பொருத்தவரை நிலவை ஆய்வு செய்ய வேண்டும் என்பது இலக்கு அல்ல. விண்வெளி ஆய்வில் சிறந்து விளங்குவதாக சீனாவும் அமெரிக்காவும் கூறிக்கொள்கின்றன. வேறு சில நாடுகளும் இந்த சாதனையை எட்ட முயற்சிக்கின்றன. எனவேதான் ரஷ்யா இந்த விண்கலத்தை அனுப்பி உள்ளது. இதன்மூலம் சோவியத் யூனியனின் நிபுணத்துவத்தை மீட்க வேண்டும் என்பதுதான் நோக்கம்” என்றார்.

EVA S